கடலூர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் திரு. இரா,இராஜசேகரன் , பி.இ.,

எண்.அ/2157/2014 நாள் : 3 .09.2014

04 SEP 2014

பொருள் : பணிக்குழு - தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டது - விழுப்புரம் , தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலக தட்டச்சர் திருமதி. த.மலர்விழி அவர்களுக்கு 22.03.2013 பிற்பகல் முதல் பணிவரன் முறை செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :
1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.7244/PSD- A4/2012 நாள்.07.02.2013
2) தொழிலாளர் ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணைகள் எண் ஜி3/6045/2013-11 , நாள்:12.03.2013.
3) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறை ஆணைகள் எண் ஓ1/8271/2013, நாள்: 20.03.2013
4) சென்னை -6, தொழிலாளர் ஆணையர், அவர்களின் குறிப்பாணை எண் ஜி3/06045/2013 , நாள்:29.10.2013.
5) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் , சென்னை அவர்களின் குறிப்பாணை எண் ஓ1/8271/2013-2, நாள்: 08.04.2014

-----

**ஆணை :-**

பார்வை (1) ன்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் செயல் முறை ஆணைகளின்படி தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் செயல் முறை ஆணைகளின்படி விழுப்புரம்,தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. த. மலர்விழி அவர்கள் 22.03.2013 அன்று பிற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே பார்வை 4ல் காணும் குறிப்பாணையின் மூலம் , பார்வை 5-ல் காணும் குறிப்பாணைக்கிணங்க விழுப்புரம், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி. த. மலர்விழி அவர்களின் பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் பொது சார்நிலைப்பணி விதி 23(அ) ன் கீழும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32-ன் கீழ் அவர் தட்டச்சராக பணியில் சேர்ந்த 22.03.2013 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் தட்டச்சர் பதவியில் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

மேலும் அரசு ஆணை எண் 50, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 14.02.1995ன் படி தட்டச்சர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சில் முதுநிலையில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும் அரசாணை (நிலை) எண் 130. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 22.07.2008ன்படி" Directorate of Technical Education or equivalent body நடத்தும் Certificate Course in Computer on Office Automation" என்ற பயிற்சியில் பணி நியமனம் பெற்ற இரண்டு வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும் (except those who possess Degree (or) Diploma in Computer Science (or) Computer Engineering approved by the university Grants Commission/ Directorate of Technical Education or equivalent body.) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் தேர்ச்சி பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூரத்தி செய்ய இயலும் என்பதால் அவர்கள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கலாகிறது.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் 3/9/14
கடலூர்.

3/9/14

பெறுநர்
திருமதி. த. மலர்விழி ,
தட்டச்சர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்,
விழுப்புரம் (உரிய வழியாக)

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.
1 தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் , சென்னை-14
2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் திருச்சிராப்பள்ளி.

நகல்
1. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் , விழுப்புரம்
2. பணிப்பதிவேடு.